பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

04 07 2025 6 45 செய்தி ஆசிரியர்

வெள்ளிக்கிழமை காலை **JK & RC**

வணக்கம்-மாநில செய்திகள் - வாசிப்பவர் - சுமித்ரா ரத்னம்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி, டிரினிடாட் டொபாகோ அதிபர் மற்றும் பிரதமருடன் இன்று இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.
- நாட்டில் ஆதார் அடிப்படையிலான பரிவர்த்தனைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு வங்கிக் கடன்களை அதிக அளவில் பெற்றுத்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பால்வளத்துறை அமைச்சர் திரு மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.
- கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஐந்து நாடுகள் பயணத்தின் இரண்டாம் கட்டமாக டிரினிடாட் டொபாகோ-வுக்குச் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அந்நாட்டு பிரதமர் கமலா பெர்சாட் அவரை வரவேற்றார்.

அங்கு அவருக்கு பாரம்பரிய முறைப்படி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், வெளிநாடு வாழ் இந்தியர்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

வெளிநாடு வாழ் இந்தியர்கள் நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் தூதுவர்களாக விளங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமக்கு அளிக்கப்பட்ட உற்சாக வரவேற்புக்காக நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் கூறினார்.

இன்று அவர் அந்நநாட்டு பிரதமர் கமலா பெர்சாட் மற்றும் அதிபர் கிறிஸ்டின் கார்லா கங்காலூ ஆகியோருடன் இருதரப்பு உறவுகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அந்நாட்டின் நாடாளுமன்றத்திலும் திரு நரேந்திர மோடி உரையாற்ற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டில் ஆதார் அடிப்படையிலான பரிவர்த்தனைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் 230 கோடிக்கும் மேற்பட்ட ஆதார் அங்கீகார அடிப்படையிலான பணப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டு இதே மாதத்தை ஒப்பிடுகையில் 7 புள்ளி 8 சதவீதம் அதிகம் என்றும் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வளர்ச்சியையும், அதற்கான ஆதாரின் பயன்பாட்டையும் இது குறிப்பிடுவதாகவும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்றபோது கடலில் தவறி விழுந்து உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், 3 லட்சம் ரூபாய் நிவாரண உதவி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு வங்கிக் கடன்களை அதிக அளவில் பெற்றுத்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பால்வளத்துறை அமைச்சர் திரு மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.

மாமல்லபுரத்தில் நடைபெற்ற பால்வளத்துறை அதிகாரிகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிக் கூட்டத்தில் பேசிய அவர், கறவை மாட்டுக் கடன்களை அதிக அளவில் வழங்க வங்கி அதிகாரிகளுடன் இணைந்து பால்வளத்துறை அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆவின் நிறுவனத்தின் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு தீவனம் உள்ளிட்டவற்றை வழங்கி, உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு திரு. மனோ தங்கராஜ் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தில் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களில் நடைபெற்ற சிறுவன் மற்றும் மாணவர் கொலை சம்பவங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றவாளிகளுக்கு அச்சமற்ற நிலை உள்ளதாகவும் காவல்துறையை நிர்வகிக்கும் முதலமைச்சர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

சிவகங்கை மாவட்டத்தில் தனியார் பள்ளியில் மர்மமான முறையில் மாணவர் உயிரிழந்த சம்பவத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சிங்கம்புணரியில் 7 வயது மாணவர் இறந்து இரண்டு நாட்கள் கழித்தே பள்ளி கண்காணிப்பாளரும் தலைமையாசிரியரும் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அந்த மாணவர் உயிரிழப்பு குறித்து, அரசு இதுவரை முறையான விளக்கம் அளிக்காதது அதிர்ச்சி அளிப்பதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஒருசில பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

தருமபுரி மாவட்டத்தில் மத்திய அரசின் ஊட்டச்சத்து இயக்கம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்மூலம் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் பெருமளவு பயனடைந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவிலின் ஆனி தேர்த்திருவிழாவுக்கு விரிவான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகர காவல் துணை ஆணையர் திரு பிரசன்ன குமார் கூறியுள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 94 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

தாய்லாந்தின் இடைக்காலப் பிரதமராக திரு. **Phumtham Wechayachai** பொறுப்பேற்றுள்ளார்.

<<<<>>>>

துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டிக்கான கோப்பைகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று அறிமுகம் செய்கிறார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா புனேவில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாடமி பயிற்சி வீரர்களுடன் இன்று கலந்துரையாடுகிறார்.

<<<<>>>>

சுரங்கப் பகுதி சூழல் மேம்பாடு தொடர்பான சமூக மேம்பாட்டுத் திட்டத்தை மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி இன்று தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

புதுதில்லியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங்கை, தமிழக ஆளுநர் திரு ஆர்.என். ரவி நேற்று சந்தித்துப் பேசினார்.

<<<<>>>>

புதுக்கோட்டை மாவட்டம் விநாயகர் கோட்டை ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டடத்தை மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் திறந்து வைத்தார்.

<<<<>>>>

நாமக்கல் மாநகராட்சியில் நரிக்குறவர் சமூக மக்களுக்கு வீடு கட்டும் பணியை ஆட்சியர் திருமதி துர்காமூர்த்தி ஆய்வு செய்தார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் அருகே காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையின்போது 22 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு இருவர் கைது செய்யப்பட்டனர்.

<<<<>>>>

சென்னை ராயபுரம் மண்டலத்தில் மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மேயர் திருமதி பிரியா ஆய்வு செய்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 21-14 என்ற செட் கணக்கில் சீன தைபேயின் **Wang Po Wei**-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் சங்கர் முத்துசாமி சுப்பிரமணியனும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Shriyanshi**-யும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-15, 21-14 என்ற செட் கணக்கில் மலேசியாவின் **Letshanaa**-ஐ வென்றார்.

<<<<>>>>

உலகக் கோப்பை ஜூனியர் செஸ் போட்டியின் பத்து வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியாவின் **Sarbartho Mani** மற்றும் **Brijesh Divi**-யும், 12 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் **Pratitee**-யும் சாம்பியன் பட்டம் வென்றனர்.

<<<<>>>>

இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

இப்போட்டியின் இரண்டாம் நாளான நேற்று இந்தியா 587 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக கேப்டன் ஷூப்மன் கில், 269 ரன் குவித்தார்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஒரு இன்னிங்சில் அதிக ரன் குவித்த இந்திய கேப்டன் என்ற வரலாற்றுச் சாதனையை அவர் படைத்தார்.

இதையடுத்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 77 ரன் எடுத்துள்ளது.

<<<<>>>>